12

# இரண்டு இராப்போஜனங்களுக்கு இடையில் வித்தியாசப்படுத்துதல் தேவைப்பட்ட ஒரு சபை

## [1 கொரிந்தியர் 11:17-34]

ஒரு விரைவான பார்வைக்குப் பின், 1 கொரிந்தியர் 11:17-34 வசனப்பகுதி கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பற்றியது மாத்திரமாகவே உள்ளது என்று நாம் கூறலாம். உண்மையில் இது, கர்த்தருடைய இராப்போஜனம் தொடர்பாக வேதாகமத்தில் காணப்படக்கூடிய மிகவும் விபரமான அறிவுறுத்துதல்களைக் கொண்டுள்ளது. கர்த்தருடைய நாளில் கர்த்தருடைய சபையின் ஆராதனையின் மையமாகக் கர்த்தருடைய இராப்போஜனம் இருப்பதால் இந்த அறிவுறுத்துதல்கள் நமக்குத் தேவைப் படுகின்றன. இருப்பினும் இவ்வசனப்பகுதி கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பற்றியதாக மாத்திரம் இருப்பதில்லை. உண்மையில் இது இரு வகையான இராப்போஜனங்களைப் பற்றியதாக உள்ளது, மற்றும் நாம் அவை இரண்டைப் பற்றியுமே கற்றறிவது அவசியமாக உள்ளது.

பவுல் ‘‘உங்களைப் புகழாமல் இதைக்குறித்து உங்களுக்குக் கட்டளைகொடுக்கிறேன்’’ என்று உறுதியாக அறிவித்தலைக் கொண்டு தொடங்கினார் (11:17).[1]

## சபைக்குழுமத்தின் இராப்போஜனம், அல்லது ஐக்கியவிருந்து

### இதன் நடைமுறை

ஐக்கிய விருந்துகள் என்பவை முதல் நூற்றாண்டு சபையின் பண்பாக இருந்தன. எருசலேமில் சபை நிலைநாட்டப்பட்ட பின்பு, முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் தங்களை ஐக்கியத்திற்கு ஒப்புக் கொடுத்திருந்தனர்; அவர்கள் “சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்,” “வீடுகள் தோறும்

*அப்பம் பிட்டனர்" மற்றும் "ஒருமனப்பட்டவர்களாய் ... போஜனம்பண்ணினர்" (நடபடிகள் 2:42, 44, 46). நடபடிகள் 20ல், வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்தபோது - அதாவது கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்க வந்தபோது - அவர்கள் பிரிந்து செல்லும் முன்பு ஒன்றாக உண்டனர் (வசனங்கள் 7-11). பாவத்தில் நிலைநின்ற ஒரு கிறிஸ்தவருடன் சபை ஐக்கியத்தை விலக்கிக் கொண்டபோது, அவருடன் உண்ணாதிருக்கும்படி சபைக்குக் குறிப்பாக அறிவுறுத்தப் பட்டது (1 கொரிந்தியர் 5:11). "இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக்கூட விருந்துண்டு," இருந்த பொல்லா மனிதர்களைப் பற்றிக் கிறிஸ்தவர்களுக்கு யூதா எழுதினார் (யூதா 12). தொடக்ககால சபையானது ஐக்கிய விருந்துகளில் அல்லது அன்பின் விருந்துகளில் முறையாகப் பங்கேற்றது பற்றி ஏராளமான சாட்சியங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன. இன்றைய நாட்களில் சபை இதே விஷயத்தைச் செய்கிறது.*

*இங்கு பவுல், கொரிந்து நகரில் இருந்த சபை இப்படிப்பட்ட விருந்துகளில் பங்கேற்றது என்று சுட்டிக்காண்பித்தார், மற்றும் அந்த நடைமுறையை அவர் அங்கீகரித்ததாகக் காணப்படுகிறது. அதே வேளையில் அவர், இந்த விருந்துகளின்போது சகோதரர்கள் நடந்துகொண்ட முறைபற்றி அவர்களைக் கடிந்துகொண்டார்.*

### *இதன் தவறான பயன்பாடு (11:18-22)*

*கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் ஒன்றாக உண்டபோது செய்த தவறு என்ன?*

*முதலாவது, அவர்கள் பிரிவினையை மேம்படுத்திக் கொண்டிருந்தனர்.* *அவர்களின் விருந்துகள் அங்கு நிலவியிருந்த பிரிவினையின் மீது கவனத்தை ஈர்த்தன (11:18, 19). பிரிந்திருந்த அல்லது கருத்து வேற்றுமையில் இருந்த கொரிந்தியர்களுக்கு (கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு), "அன்பின் விருந்து" கூட பிரிவினையை பேணும் மற்றும் அதைக் காட்சிப்படுத்தும் சந்தர்ப்பமாகவே இருந்தது.[2] எவ்வாறு? இதை நாம் யூகிக்க மாத்திரமே முடியும், ஆனால் ஒருவேளை அவர்கள், சபையாராகச் சேர்ந்து உணவருந்தும்போது, தனிப்படுத்தப்பட்ட உணவு மேஜைகளில் அமருதல் அல்லது சபையில் குறிப்பிட்ட தனிநபர்களைத் தங்களுடன் உணவருந்த அனுமதிப்பதற்கு மறுத்து விடுதல் என்ற கருத்தை ஏற்படுத்தி இருக்கலாம்.*

*இரண்டாவது, அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஐக்கியவிருந்துடன் குழப்பிக் கொண்டிருந்தனர்.* *ஐக்கிய விருந்தைப் பற்றிய இப்படிப்பட்ட கேலியான செயலானது அது "கர்த்தருடைய இராப்போஜனம்" என்று அழைக்கப்படத் தகுதியற்றதாகியது என்பதே விளைவாக இருந்தது. அவர்களுக்குப் பவுல், "நீங்கள் ஓரிடத்தில் கூடிவரும்போது, அவனவன் தன்தன் சொந்த போஜனத்தை முந்திச் சாப்பிடுகிறான்; ஒருவன் பசியாயிருக்கிறான். ஒருவன் வெறியாயிருக்கிறான், இப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம் பண்ணுதலல்லவே" என்று புத்திகூறினார் (11:20). ஐக்கிய விருந்து என்பது சபைக்குழுமத்திற்கு மதிப்புடையதாக இருக்கையில், அது கர்த்தருடைய இராப்போஜனத்திற்குப் பதிலாக வைக்கப்படவும் கூடாது அல்லது அது கர்த்தருடைய இராப்போஜனத்துடன் குழப்பிக்கொள்ளப்படவும் கூடாது.*

*கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் தங்கள் உணவு உண்ணுதலில் ஒருவர் மற்றவர் குறித்துக் கவலைப்படத் தவறினர்* என்பது அன்பின் விருந்தைப் பொறுத்தமட்டிலான *மூன்றாவது, தவறான பயன்பாடாக இருந்தது* (11:21, 22). ஒவ்வொரு நபரும், குடும்பமும் அல்லது குழுவும் தங்கள் சொந்த இராப்போஜனத்தை - அவர்கள் தங்களுக்காகக் கொண்டுவந்திருந்த உணவை - உண்டவேளையில், சிலர் ஏராளமான உணவைக் கொண்டிருந்தனர் மற்றும் பிறர் பசியாக இருந்தனர். செல்வந்தர்களின் ஏராளப் பொருள்களில் இருந்து வறியவர்களுக்கு உணவளித்தல் என்பது இந்த விருந்தின் தோற்றகால நோக்கங்களில் ஒன்றாக இருந்தது,[3] ஆனால் இந்த விருந்து அந்த நோக்கத்தை நிறைவேற்றவில்லை. அதற்குப் பதிலாக இது, உறுப்பினர்களுக்கு இடையில் வேறுபாடுகளை வலியுறுத்தி ஏற்கனவே நிலவிய பிரிவினைகளை வளர்த்தது.

*ஐக்கிய விருந்தின் முழுநோக்கத்தைக் கொரிந்தியக் கிறிஸ்தவர்கள் தவறாகப் புரிந்துகொண்டனர் என்பது இந்த விருந்தைப் பற்றிய நான்காவது, தவறான பயன்பாடாக இருந்தது.* அது வயிற்றை நிரப்புவதற்கானதாக மாத்திரம் இருந்தது என்று அவர்கள் நினைத்தனர் (11:22). அது அதனுடைய முதன்மை நோக்கமாக இருக்கவில்லை; உலகப்பிரகாரமான உணவுக்கான தேவை என்பது சபைகூடுதல் இல்லாமலேயே கூட, சுலபமாகச் சந்திக்கப்பட முடியும். அந்தக் கருத்தைப் பவுல், "ஒருவனுக்குப் பசியிருந்தால் வீட்டிலே சாப்பிடக்கடவன்" என்று கூறியபோது ஏற்படுத்தினார் (11:34அ). ஐக்கியவிருந்து என்பது, அன்பு, சார்ந்திருக்கும் கருத்துணர்வு மற்றும் ஐக்கியம் ஆகியவற்றை விளைவிக்க விருப்பநோக்கங் கொண்டிருந்தது; அது செல்வர்களிடம் இருந்து வறியவர்கள் சங்கடப் படுத்தப்பட்டிருத்தல் இன்றி உதவி பெறுவதற்கான வேளையாக இருக்கும்படி யூகிக்கப் பட்டிருந்தது. இருப்பினும் கொரிந்தியர்கள் ஐக்கியவிருந்தைத் தவறாகப் பயன்படுத்தியமையானது, அது நன்மை செய்வதைக் காட்டிலும் அதிகமாகத் தீமை செய்தது என்பதை அர்த்தப்படுத்தியது.

### அதன் பயன்

கொரிந்தியக் கிறிஸ்தவர்களின் தவறுகளில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நான் பிரசங்கித்த ஒரு சபைக்குழுமத்தில், ஒரு மாதத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனைக்குப் பின்பு, ஐக்கியவிருந்திற்காகச் சகோதரர்கள் ஒன்று கூடினர். ஆராதனை ஊழியம் முடிந்த உடனே, சில பெண்கள் கடைசிநேரத் தயாரிப்புகளைச் செய்வார்கள் மற்றும் அதன் பின்பு நாங்கள் உணவை உண்ணத் தொடங்கும்படி கீழ்த்தளத்திற்குச் செல்லும்படி அவர்கள் எங்கள் ஒவ்வொருவரையும் அழைப்பார்கள். நாங்கள் எங்களுக்கு உரிய தட்டுகளில் பரிமாறப்பட்டு உணவு மேஜைகளில் உண்பதற்காக எங்கள் இருக்கைகளை எடுத்துக்கொள்வோம். எங்கள் உணவை உண்டு முடிப்பதற்கு நாங்கள் நேரம் கொண்டிருக்கும் முன்பே, அவர்கள் அந்த உணவறையைச் சுத்தம் செய்யக் கூடும்படிக்கு, எங்களை சீக்கிரம் உண்டு முடிக்கும்படி ஊக்குவிப்பார்கள். உணவிற்கு முன்னும் உணவின் போதும் மற்றவர்களைப் பார்த்துப் பேசுவதற்கும், ஒருவர் மற்றவரை இன்னும் சிறப்பாக அறிந்துகொள்வதற்கும் சிறிதளவு நேரமே அனுமதிக்கப் பட்டது.

இப்படிப்பட்ட அனுபவங்களைப் பெற்றுப் பல மாதங்களுக்குப் பின்பு, ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் எங்கள் பாரம்பரிய உணவிற்கு

முன்னர், நான் தொடக்கநிலைக் குறிப்புகள் சிலவற்றைக் கூறினேன். நான், “உங்கள் அவசரம் என்ன?” என்று கேட்டேன். பின்பு நான், இந்த உணவுகளில் உண்மையான நோக்கம் பற்றிப் பேசினேன். அவைகள் உண்டு செல்வதற்காக மாத்திரம் அல்ல, ஆனால் உயர்வான சில நோக்கங்களை நிறைவேற்றுதலை நோக்கங்கொண்டிருந்தன என்று விளக்கம் அளித்தேன். கிறிஸ்துவுக்குள் சகோதரர்கள் சகோதரிகள் என்றவகையில் நாம் உணவைப் பகிர்ந்து கொள்வதற்காகக் கூடிவரும்போது, அந்த உண்மையை நாம் நினைவில் வைக்க வேண்டும். ஐக்கிய விருந்து ஒருமைப்பாட்டைப் பேணுதல், அன்பை மேம்படுத்துதல் மற்றும் வறியவர்களுக்கு உதவுதல் ஆகியவற்றைக் கொண்டிராவிட்டால், நாம் வீட்டிலேயே உண்ணலாம்.

## கர்த்தருடைய இராப்போஜனம்[4]

1 கொரிந்தியர் *11:17-34* வசனப் பகுதியானது, ஐக்கிய விருந்தைப் பற்றிய பவுலின் அறிவுறுத்துதல்களைக் கொடுப்பதுடன் கூடுதலாக, கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பற்றியும் போதிக்கிறது. அது என்னவாக உள்ளது மற்றும் அதில் நாம் எவ்வாறு பங்கேற்பது என்பவற்றைப் பற்றிப் பவுல் விளக்கப்படுத்தினார்.

**அது என்னவாக உள்ளது? (11:23-26)**

*நம்முடைய கர்த்தராகிய இயேசு, கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்படுத்தினார்.* அதை நாம் இலேசானதாக எடுத்துக்கொள்ளவோ அல்லது அதைப் புறக்கணிக்கவோ துணியாதிருப்போமாக.

*இராப்போஜனத்தை ஒரு நினைவுகூரும் விருந்தாக அவர் நமக்குக் கொடுத்தார்.* இயேசு, “என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்” என்று கூறினார். அப்பம் அவரது சரீரத்தின் நினைவுகூருதலாக உள்ளது, மற்றும் பாத்திரம் நமது பாவங்கள் மன்னிக்கப் படுவதற்காக அவர் சிந்திய இரத்தத்தின் நினைவுகூருதலாக உள்ளது. இந்த ஐக்கிய விருந்தில் நாம் பங்கேற்கும்போது, அவரது மரணத்தின் நினைவாக அதைச் செய்ய வேண்டும் மற்றும் சிலுவையில் அவர் நமக்காகச் செய்தவற்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

*இயேசு தமது சரீரத்தின் உறுப்பினர்கள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் மீட்கப் பட்டிருந்தனர் என்பதை அவர்களுக்கு நினைவூட்டுவதற்காகக் கர்த்தருடைய இராப்போஜனத்தை நிலைநாட்டினார்.* எகிப்தில் ஆட்டுக்குட்டியின் இரத்தம் சிந்தப்பட்டதால் இஸ்ரவேல் மக்களின் முதற்பேறான பிள்ளைகள் மரணத்தில் இருந்து காக்கப்பட்டிருந்ததை வருடந்தோறும் அவர்களுக்கு பஸ்கா பண்டிகை நினைவூட்டியது போலவே, நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம், கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவத்தின் அடிமைத் தனத்தில் இருந்து மீட்கப்பட்டோம் என்பதை ஐக்கிய விருந்தானது நமக்கு நினைவூட்டுகிறது.

கர்த்தருடைய இராப்போஜனம் இராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது என்பதை வலியுறுத்துவதற்காக சபைக்குத் தரப்பட்டது. இயேசு, “இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லை” என்று கூறினார் (மத்தேயு *26:29*). சபையில் இராத மக்கள்

இந்த ஐக்கிய விருந்தில் பங்கேற்றால் தீமை எதுவும் செய்யப்படுவதில்லை என்றிருக்கையில், இராஜ்யமாகிய சபையில் உள்ளவர்கள் மாத்திரமே இதில் பங்கேற்கும் சிலாக்கியத்தைக் கொண்டுள்ளனர். அந்த சிலாக்கியத்தை உரிமைகோர விரும்பும் எவரும் சபையின் அங்கமாக வேண்டும்.

கர்த்தருடைய பந்தியில் நாம் பங்கேற்றலானது "அவர் வரும்வரையில்" அவரது மரணத்தை அறிவிக்கிறது என்று பவுல் கூறினார் (11:26). பின்பு அவர் நித்தியத்திற்கும் தம்மோடு இருக்கும்படி நம்மை அழைத்துச் செல்வார்.

### நாம் இதில் எவ்வாறு பங்கேற்கிறோம்? (11:27-34)

1 கொரிந்தியர் 11:17-34ல் இருந்து நாம், கர்த்தருடைய இராப்போஜனத்தில் எவ்வாறு நாம் பங்கேற்க வேண்டும் என்பதையும் கற்றுக்கொள்கிறோம்.

*நாம் இதில் பாத்திரமான வகையில் பங்கேற்க வேண்டும்* (11:27). இது, நாம் தகுதியானவர்களாக இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுவது *இல்லை.* இயேசு செய்த தியாகத்திற்கு எவரொருவரும் தகுதியானவராக இருப்பதில்லை. இது, நாம் பாவமற்றவர்களாக இருக்க வேண்டும் என்றும் அர்த்தப்படுத்துவதில்லை. நாம் பாவமற்றவர்களாக இருக்க வேண்டும் என்றால், எவரொருவரும் இதில் பங்கேற்க முடியாது. வார நாட்களின்போது பாவம் செய்திருப்பவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கக் கூடாது என்று சிலர் நம்புகின்றனர், ஆனால் இந்தக் கண்ணோட்டம் தவறானதாக உள்ளது! பாவத்தினிமித்தம் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்காமல் இருப்பது உண்மையில் இன்னொரு பாவமாக உள்ளது. பாவத்தைக் குறித்துக் கவலைப்படும் ஒருவர், அதாவது கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்பதில் சங்கடம் அடையும் *ஒருவர், பாவத்தைக் குறித்துச் சிலவற்றைச் செய்ய வேண்டும்,* ஆனால் அவர் ஐக்கிய விருந்தைப் புறக்கணிக்கக் கூடாது.

பாத்திரமான வகையில் ஐக்கிய விருந்தில் பங்கேற்பது பற்றி வேத வசனங்கள் குறிப்பான அறிவுறுத்தல்களைத் தருகின்றன.

(1) மற்றவர்கள் அல்ல/மற்றவர்களை அல்ல, ஆனால் நம்மை நாமே "சோதித்தறிய" வேண்டும் (11:28). நம்மை நாமே சோதித்தறிகையில், தேவனுடைய கிருபைக்காக அவருக்குத் துதிசெலுத்தும்படி நாம் அசைக்கப் படுவோம், நமது பாவங்களுக்கு மன்னிப்பை நாடும்படி நாம் ஊக்குவிக்கப் படுவோம் மற்றும் கர்த்தருக்கு நம்மை நாம் மறுபடியும் அர்ப்பணிப்போம்.

கர்த்தருடைய இராப்போஜனம் காலத்தின் ஒவ்வொரு அம்சத்துடனும் தொடர்பு படுகிறது. இது - நாம் இரட்சிக்கப்படும்படி இயேசு சிலுவையில் மரித்ததைக் காண்பதற்கு - ஒரு பின்னோக்கிய பார்வையை உள்ளடக்குகிறது. இது - நாம் நிகழ்காலத்தில் இரத்தத்திற்குத் தகுதியற்றவர்களாக ஆனால் எவ்வாறேனும் இரட்சிக்கப்பட்டவர்களாக இருப்பதை நாமே நம்மைக் கண்ணோக்க - ஒரு உள்ளான பார்வையை கேட்கிறது! இது - கர்த்தர் மீண்டும் வருவார் என்று அறிவித்தலுக்கான - ஒரு முன்னோக்கு பார்வையையும் உள்ளடக்குகிறது! பவுல், "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்று எழுதினார் (11:26). கர்த்தருடைய பந்தியைச் சுற்றி நாம் ஒன்றுகூடும்போது, கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் ஆகியவை சந்திக்கின்றன.

(2) மேலும் நாம் சரீரத்தைப் பொறுத்த மட்டில், சரீரத்தை “நிதானிக்க” வேண்டியவர்களாக அல்லது ‘‘பகுத்தறியக் கூடியவர்களாக’’ இருக்க வேண்டியுள்ளது (11:29-32). பவுல் “என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்’’ என்று கூறியபோது (11:29) அவர் அர்த்தப்படுத்தியது என்ன? சிலுவையின் மீது கிறிஸ்து தொங்கினார் என்ற வகையில் அவருடைய சரீரத்தைப் பற்றிப் பவுல் குறிப்பிட்டிருக்கலாம் என்ற ஒரு சாத்தியக்கூறு உள்ளது. நமக்காக கிறிஸ்து மரித்தார் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். சபை என்ற கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தைப் பற்றிப் பவுல் குறிப்பிட்டு இருக்கலாம் என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது. அது அர்த்தமாக இருந்தால், நாம் சபையைப் பற்றி நினைக்க வேண்டும் என்று பவுல் கூறினார் என்றாகிறது. கர்த்தருடைய இராப்போஜனம் ஒரு சமூக நடவடிக்கையாக, சபை ஒன்றாகக் கூடிச் செய்யும் ஒரு விஷயமாக உள்ளது. கொரிந்தியர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் மற்றவர்கள் பங்கேற்க வேண்டும் என்று அக்கறையாயிருக்கத் தவறியிருந்தனர் என்று இவ்விடத்தில் பவுல் குறிப்பிட்டு இருக்கலாம்.

(3) நாம் “ஒருவருக்காக ஒருவர் காத்திருக்க” வேண்டும் (11:33, 34). கர்த்தருடைய இராப்போஜனம் பற்றிய பவுலின் கலந்துரையாடலின் முடிவில் அவர், கொரிந்தியர்கள் “போஜனம் பண்ண” கூடிவரும் வேளையில், அவர்கள் ஐக்கிய விருந்தையும் கர்த்தருடைய இராப்போஜனத்தையும் குழப்பிக் கொண்டனர் என்பதைக் கூறத் திரும்பினார். அவர், “ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள். நீங்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்றாலும் அல்லது ஐக்கிய விருந்தில் கலந்து கொண்டாலும், மற்றவர்கள் ஆயத்தமாகும் வரையில் அவ்வாறு காத்திருங்கள். மற்றவர்களைக் குறித்து அக்கறையாயிருங்கள்” என்று கூறினார்.

“ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள்” என்ற புத்திமதியானது, கர்த்தருடைய இராப்போஜனம் ஒரு ஐக்கிய விருந்தாக - ஒரு பகிர்ந்து கொள்ளுதலாக, ஒரு ஐக்கியமாக - உள்ளது என்ற உண்மையை வலியுறுத்துகிறது. 1 கொரிந்தியர் 10:16 ன்படி, நாம் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கும்போது, நாம் கிறிஸ்துவின் உடலிலும் இரத்தத்திலும் பகிர்ந்து கொள்கிறோம். “கர்த்தருடைய போஜனபந்தி’’ (10:21) என்பது கர்த்தருடன் ஐக்கியமாயிருத்தலை உள்ளடக்குகிறது; அவரது இராப்போஜனத்தில் அவருடன் நாம் பங்கேற்கிறோம் (மத்தேயு 26:29). இருப்பினும் மற்றவர்களுடன் இந்த நினைவுகூரும் தருணத்தைப் பகிர்ந்து கொள்ளும்போது, நாம் அவர்களுடன் விருந்து உண்கிறோம் அல்லது ஐக்கியம் கொண்டிருக்கிறோம்.

*பாத்திரமான வகையில் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கத் தவறுதல் என்பது, அதற்குரிய விளைவுகளைக் கொண்டுள்ளது.* நாம் ஐக்கிய விருந்தில் பாத்திரமான வகையில் பங்கேற்கவில்லை என்றால், நாம் பல செயல் விளைவுகளை அனுபவிக்கலாம் என்று பவுல் கூறினார்:

- 27ம் வசனத்தின்படி, நாம் ‘‘கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும்குறித்துக் குற்றமுள்ளவ’’ர்களாக இருக்கிறோம். வேறு

*வார்த்தைகளில் கூறுவதென்றால், நாம் சரியான வழியில் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கவில்லை என்றால், நாம் கிறிஸ்துவை மறுபடியும் சிலுவையில் அறைந்த குற்றம் கொண்டவர்களாக இருக்கிறோம்!*

- *29ம் வசனத்தின்படி, நாம் "கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியா"மல் இருந்தால், நமக்கு நாமே ஆக்கினைத் தீர்ப்பைக் கொண்டுவருகிறோம்.*
- *30ம் வசனத்தின்படி, சரியான வகையில் நாம் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கத் தவறினால், நாம் ஆவிக்குரிய வகையில் "வியாதிப்படுவோம் மற்றும் மரிப்போம்."*
- *31 மற்றும் 32ம் வசனங்களின்படி, நம்மை நாமே சோதித்தறியாது அல்லது சரீரத்தை "நிதானித்து அறியாது" இருந்தால், நாம் கர்த்தரால் நியாயந்தீர்க்கப்பட்டு சிட்சிக்கப்படுவோம். நம்மை நாமே சோதித்தறிதல் அல்லது கர்த்தரால் சோதித்தறியப்படுதல் என்பவையே நமது மாற்றுகளாக உள்ளன!*

## முடிவுரை

*பவுலின் அறிவுறுத்துதல்கள், இன்றைய நாட்களில் சபைகள் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளவும் ஆத்துமாக்களை இரட்சிக்கவும் உதவக்கூடும். பொதுவான இரண்டு கொள்கைகள் நடைமுறைப் படுபவையாக உள்ளன.*

***"உங்கள் ஐக்கியத்தைப் பயனுள்ளதாக்குங்கள்"***

*ஐக்கிய வாய்ப்புகள் ஆவிக்குரிய வகையில் பயனுள்ளவை ஆக்கப்படுவதை நாம் நிச்சயப் படுத்திக் கொள்ள வேண்டும். முறையான ஆராதனைக்குப் புறம்பே உறுப்பினர்கள் ஐக்கியத்தை மகிழ்வுடன் அனுபவிப்பதற்கு சபைகள் வாய்ப்பளிக்க வேண்டும். உதாரணமாக, ஐக்கிய விருந்துகள் அல்லது "பானை - அதிர்ஷ்ட இரவு உணவுகள்" ஆகியவை சபைக்குழுமத்திற்கு நல்லவையாக உள்ளன. ஐக்கியத்திற்கான எந்த சந்தர்ப்பம் பற்றியும் கேட்க வேண்டிய முதன்மைக் கேள்வியாக உள்ளது. "இது வேடிக்கையாக உள்ளதா?" என்பதல்ல. "இது வறியவர்களுக்குப் பலன் அளிக்கிறதா, ஐக்கியத்தை மேம்படுத்துகிறதா, ஆவிக்குரிய வளர்ச்சியை ஊக்குவிக்கிறதா, சகோதர அன்பை அதிகமாக்குகிறதா மற்றும் சபையில் உள்ள வேறுபட்ட குழுக்களிடையே பெரிய புரிந்துகொள்ளுதலைத் தோற்றுவிக்கிறாத?" என்பதே உண்மையான சோதனையாக இருக்க வேண்டும்.*

***"கர்த்தருடைய இராப்போஜனத்தை அர்த்தம் நிறைந்ததாக்குங்கள்"***

*கர்த்தருடைய இராப்போஜனத்தை நாம் அர்த்தம் நிறைந்ததாக்க வேண்டும். ஐக்கிய விருந்தில் பங்கேற்பதினால் நாம் ஒரு வெற்றுச் சடங்காச்சாரத்தில்தான் ஈடுபடுகிறோம் என்ற கருத்தைப் பெற்றவர்களாக இருக்கக் கூடும். இவ்வகையான சிந்தனையுடன் நாம், கர்த்தருடைய இராப்போஜனத்தில் என்ன செய்கிறோம் மற்றும் எவ்வாறு செய்கிறோம் என்பது சிறிதளவே வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது என்று யூகிக்கக் கூடும். அந்தக் கண்ணோட்டத்தை, 1 கொரிந்தியர் 11ம் அதிகாரம்*

*மறுத்துரைக்கிறது. சொல்லப்போனால் நாம், கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கும்போது - நாம் பாடும்போது அல்லது வேதாகமத்தைப் படிக்கும்போது அல்லது கொடுக்கும்போது செய்வது போன்றே - ஒரு கருத்தில் நாம், ஒரு சடங்காச்சாரத்தில்தான் பங்கேற்கிறோம். இருப்பினும் இது அர்த்தமற்ற சடங்காச்சாரமாக இருப்பதில்லை. மாறாக இது மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு சடங்காச்சாரமாக உள்ளது, இது கர்த்தர் தாமே நிலைநாட்டியதாக உள்ளது. நாம் இதில் சரியாகப் பங்கேற்கிறோமா இல்லையா என்பது, நாம் ஆவிக்குரிய வகையில் பிழைத்திருக்கிறோமா அல்லது மரித்திருக்கிறோமா என்பதைத் தீர்மானிப்பதாக இருக்கலாம்.*

*கர்த்தருடைய இராப்போஜனத்தை அர்த்தம் நிறைந்ததாக ஆக்குவதற்கு நாம், வேதவசனங்களின் எல்லைகளுக்குள், சாத்தியமான ஒவ்வொன்றையும் செய்ய வேண்டும். பங்கேற்பவர்கள் தங்களைத் தாங்களே சோதித்து அறியும்படி, சரீரத்தை நிதானித்து அறியும்படி மற்றும் ஐக்கிய விருந்தில் தங்களுடன் பங்கேற்கும் மற்ற உறுப்பினர்களைக் குறித்து அக்கறை கொண்டிருக்கும்படி ஊக்குவிக்கப்பட வேண்டும்.*

---

குறிப்புகள்

*[1]11:17ல் - "உங்களைப் புகழாமல்" (11:22லும் காணப்படுகிற ஒரு கருத்து) என்ற - பவுலின் கூற்று, அவர் 11:2ல் கூறிய - "உங்களைப் புகழுகிறேன்" என்ற - கருத்துக்கு நேர்மாறாக இருப்பதை நோக்கங் கொண்டுள்ளது. [2]இதற்கு நேர்மாறான வகையில், "அன்பின் விருந்து" என்பது "ஒருமைப்படுத்தும் மற்றும் மேல் எழுப்பப்படும் அனுபவமாக" இருக்கும்படி வடிவமைக்கப் பட்டிருக்க வேண்டும்* (Millard J. Berquist, *Studies in First Corinthians* [Nashville: Convention Press, 1960], 85); *இதற்குப் பதிலாக கொரிந்து நகரில் இது பிரிவினையையும் ஐக்கியம் இன்மையையும் பேணியது. [3]கி.பி. 51ம் ஆண்டில் (பவுல் கொரிந்து நகரில் ஒன்றரை ஆண்டு காலம் செலவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றபின் சற்றுக்காலத்தில்) கொரிந்து நகரில் ஒரு பஞ்சம் ஏற்பட்டிருக்கலாம், இது செல்வந்தர்கள் தங்கள் உணவை வறியவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதலை அவசியப் படுத்தியிருந்தது. மற்றும் பவுல் "இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம்" (7:26) என்பதைப் பற்றிப் பேசியபோது அவர் இந்தப் பஞ்சத்தின் விளைவைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கலாம்.* (B. B. Blue, "Love Feast," in *Dictionary of Paul and His Letters,* ed. Gerald F. Hawthorne, Ralph P. Martin, and Daniel G. Reid [Downers Grove, Ill.: InterVarsity Press, 1993], 579.) *[4]11:20ல் பவுல் இந்த நினைவுகூரும் விருந்தை "கர்த்தருடைய இராப்போஜனம்" என்று கூறினார். இது 1 கொரிந்தியர் 10:21ல் "கர்த்தருடைய பந்தி" என்று விவரிக்கப் படுகிறது. இந்த இராப்போஜனத்தில் கிறிஸ்தவர்கள் பங்கேற்கும்போது, அவர்கள் கிறிஸ்துவுடனும் ஒருவர் மற்றவருடனும் உண்ணுகின்றனர் என்பதால் இது "ஐக்கிய விருந்து" என்றும் குறிப்பிடப்பட முடியும். இது "அப்பம் பிட்குதல்" என்றும் கூறப்படுகிறது (நடபடிகள் 2:42; காண்க 1 கொரிந்தியர் 10:16; நடபடிகள் 20:7).*